# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 14 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை : ரூ. 10


# திருவள்ளுவரை மதிக்காதவர்களைத் தமிழர்கள் ஏன் மதிக்க வேண்டும்..?

## கன்னியாகுமரி விவேகானந்தர் மண்டபத்தைப் பார்க்க முடிந்த இந்தியக் குடியரசுத்தலைவருக்கு அருகிலுள்ள திருவள்ளுவர் சிலையைப் பார்க்க முடியாதா?..

கடந்த மார்ச்சு 18 அன்று இந்திய அரசின் குடியரசுத்தலைவர் தமிழ்நாட்டின் கன்னியாகுமரிக்கு வந்து விவேகானந்தர் பாறை மண்டபத்தைச் சுற்றிப் பார்த்ததுடன், அந்த மண்டபத்தைச் சூழ்ச்சியாகக் கட்டிய ஆர் எஸ் எஸ் வெறியர் இராணடேவைப் புகழ்ந்தும் பேசியுள்ளார்.. மண்டபத்தில் உட்கார்ந்து 'தியானமும்' செய்திருக்கிறார்..

1962 இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் விவேகானந்தர் கேந்திரம் ஒன்றை நிறுவுவதன் வழி ஆர் எஸ் எஸ் இயக்கத்தைக் காலூன்றி வளர்க்கலாம் என்னும் திட்டத்தில் இருந்த இராணடே என்கிற சித்பவன் பிராமணருக்கு வேலை திட்டத்தைக் கொடுத்தது ஆர் எஸ் எஸ்..



கன்னியாகுமரிக்கு குடியரசு தலைவர் வருகை

விவேகானந்தர் மண்டபத்தை பார்வையிட்டார்

தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஏமாற்றித் தமிழ்நாட்டில் விவேகானந்தர் பெயரிலும், அரவிந்தர் பெயரிலும் மண்டபங்கள் கட்டுவதும், அதை இந்திய அதிகார வகுப்பினர் வந்து வேடிக்கை பார்ப்பதுமான நடைமுறை தமிழர்களை ஏமாளிகள் என்கிற அளவில் அல்லவா உருவாக்கி வைத்திருக்கிறது..

விவேகானந்தா கேந்திரம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு முன்பு வரை கன்னியாகுமரி முனையின் பெரும்பாறையில் மீன்கள் உலர்த்தி வந்த மீனவர்கள், கிறித்துமசு நாளில் மிகப்பெரும் விழாவை அங்கு நடத்தி வந்தனர்.. அதை எப்படியாவது நிறுத்தி அந்தப் பாறையில்தான் கிறித்துமசு நாளன்று விவேகானந்தர் தியானம் செய்ததாகச் சொல்லி விவேகானந்தர் மண்டபம் கட்ட வேண்டும் எனும் ஆர் எஸ் எஸ் அழுத்தத்தை அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மறுத்திடவே இந்தியத் தலைமை அமைச்சர் இலால்பகதூர் சாஸ்திரியின் ஒப்புதலோடு வங்காள, கேரளா உள்ளிட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளைப் பெற்று சூழ்ச்சியோடு அந்த மண்டபத்தை அங்கு நிறுவிக்கொண்டனர்.

வங்காளத்திலோ அல்லது கேரளத்திலோ திருவள்ளுவருக்கோ அல்லது வள்ளலாருக்கோ முதன்மையான இடத்தில் ஒரு மண்டபத்தை இங்குள்ள அமைப்புகள் கட்டி எழுப்பி விட முடியுமா?

கன்னியாகுமரிக்கு வந்த குடியரசுத் தலைவரால் விவேகானந்தர் பாறையில் தியானம் செய்ய முடிகிறது.. ஆனால், அதற்கு அருகில் உள்ள தமிழர்களின் அறவழிநெறியர் திருவள்ளுவர் சிலைக்குச் சென்று பார்க்காமல், பேராசான் குறித்துக் கருத்து கூறாமல் போவது பேராசானை, தமிழர்களை இழிவு படுத்துவதாகாதா?..

தமிழ்நாட்டிற்குள் வந்தேறியாக நுழைந்த இராணடே தமிழர்களின் மெய்யியல் பேராசானை மறைக்கும் நோக்கில் விவேகானந்தரைத் திட்டமிட்டுத் திணித்ததை எதிர்த்துப் போராடாமல் தமிழ் நிலத்தை விட்டுக் கொடுத்ததால் வந்த விளைவுகளல்லவா இவையெல்லாம்..

தமிழ்நாட்டு மெய்யியல் பேராசானை மதிக்காதவர்களைத் தமிழர்கள் ஏன் மதிக்க வேண்டும்?

□என்று கேள்வி எழுப்புகிற உணர்ச்சி தமிழர்கள் இடையே வருவது எப்போது?

# தமிழ்நாட்டிலிருந்து... கனிமவளக் கொள்ளை

ஜமீன்,
இயற்கை வளப் பாதுகாப்புச் சங்கம்



தமிழ்நாட்டில் இருந்து அண்டை மாநிலங்களுக்குக் கனிம வளங்கள் கொண்டு செல்வதால் தொடர்ந்து மிகப்பெரிய இன்னல்களைத் தமிழக மக்கள் சந்தித்து வருகிறார்கள் என்பதோடு விரைவில் தென்தமிழகம் பாலைவனமாகும் சூழல் உருவாகி இருக்கிறது.

அண்டை மாநிலங்களுக்கு அதிகப்படியான கனிம வளங்களைக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் மட்டுமன்றி அதன் வழி மிகுதியான வருவாய்க்காகவும் சக்தி வாய்ந்த வெடிபொருட்களைப் பயன்படுத்திக் கல் சுரங்கம்(குவாரி) உரிமையாளர்கள் பாறைகளை வெட்டி எடுக்கிறார்கள்.

மேலும் வரையறுக்கப்பட்ட அளவைவிட அதிக அளவு ஆழம் தோண்டுகிறார்கள். இதனால் அக்கம்பக்கத்தில் உள்ள வேளாண்மை பாதிக்கப்பட்டு உழவர்கள் தங்கள் நிலத்தைக் குவாரி உரிமையாளர்களிடம் அடிமட்ட விலைக்கு விற்று விட்டுப் போகக்கூடிய நிலை தென்காசி, திருநெல்வேலி மாவட்ட பகுதிகளில் தற்சமயம் நடைபெற்றுவருகிறது.

அதிக அளவு ஆழம் தோண்டப்பட்டு வருவதால் விரைவில் நிலநடுக்கம் கூட வர வாய்ப்பு இருக்கிறது என்று உழவர்களும் கல்குவாரி இருக்கும் பகுதியில் வாழும் மக்களும் வேதனை அடைகிறார்கள்.

உள்ளூருக்குக் கல் குவாரி தேவைதான்.. ஆனால் அண்டை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய சூழல் வரும்பொழுதுதான் அங்கு தவறு நடக்கிறது. எனவே தான் அண்டை மாநிலங்களுக்குக் கனிம வளங்கள் கொண்டு செல்வதைத் தடுக்க வேண்டும் என்று நாங்கள் போராடி வருகிறோம்.

தற்சமயம் தென்காசி மாவட்டம் புளியரை சோதனை சாவடி வழியாகக் கனிம வளங்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை 600 ஐத் தாண்டி உள்ளது என்பது வேதனையான சம்பவம். விரைவில் இது இரண்டாயிரத்தைத் தொடும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இது நீடித்தால் என்னவாகும் என்பதை மக்கள் சிந்தித்தாக வேண்டும்.

ஆளுகின்ற ஆட்சியாளர்களுக்கு மக்களின் எதிர்காலத்தைப் பற்றி கொஞ்சம் கூட கவலை இல்லை என்பதே உண்மை. அதைப் பயன்படுத்திக் கொள்ளும் அரசு அதிகாரிகள் கோடிகளில் புரளுகிறார்கள். நாளும் சாலையில் செல்லும் கனிமவள வண்டிகளைப் பார்த்து மக்கள் வயிற்றெரிச்சலுடன் தங்கள் வயிற்றில் அடித்துக் கொள்கிறார்கள். இதனால் மக்கள் அரசின் மீது கடும் சினத்தில் உள்ளனர் . மக்கள் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இதற்குத் தக்க விடை கொடுக்கலாம் ஆனால் அதுவும் தீர்வாகிவிடமுடியாது.

ஆறு மாதத்திற்கு முன்னதாக ஒரு நாளைக்கு 200 வண்டிகள் தென்காசி மாவட்டம் புளியரை ஆய்வுச்சாவடி வழியாகச் சென்று கொண்டிருந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் நாளொன்றுக்கு 600 வண்டிகள் வரை செல்வதாகச் சொல்லப்படுகிறது.

அதுவும் போலியாக எடைச் சீட்டு உருவாக்கிக் கொண்டு அதிக எடைகளை ஏற்றிக்கொண்டு கேரளாவிற்குள் நுழைகிறது. இந்தக் கனிமவளக் கடத்தல் கும்பல் எதை வேண்டுமானாலும் செய்ய துணிவார்கள் என்பதற்குப் போலி எடைச் சீட்டு ஒரு சான்று.

6சக்கர வண்டியில் 18.5 கல்லெடை(டன்)
10 சக்கர வண்டியில் 28 கல்லெடை
12 சக்கர வண்டியில் 35 கல்லெடை
14 சக்கர வண்டியில் 42 கல்லெடை

இதில் 5 விழுக்காடு தார்ப்பாய் மற்றும் டீசல் அளவுகளுக்காக அதிக எடை ஏற்றுக் கொள்ளலாம். இதுதான் வரையறை. ஆனால் இதைக் கனிம வளங்கள் கொண்டு செல்லும் வண்டிகள் கடைபிடிப்பதில்லை. அதிக எடை ஏற்றினால் மட்டுமே அவர்களுக்கு அதிக ஊதியம் என்பதால் எதையும் செய்ய துணிகிறார்கள்.

மலை வளமிக்க கேரளா தன்னுடைய இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாக்கிறது. அந்த நாட்டிலிருந்து ஒரு கைப்பிடி கனிம வளத்தைத் தமிழ்நாட்டிற்குள் கொண்டுவர முடியாது.

ஆனால் தமிழ்நாட்டில் அனைத்து எல்லைகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான வண்டிகளில் நாளும் கனிம வளங்கள் கேரளாவுக்குள் கொண்டு செல்லப்படுகின்றன.

எதிர் வரும் நம்முடைய தலைமுறையினருக்குக் கனிம வளங்கள் இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் இருந்து வரும் நிலையில் இப்பொழுதே நமக்குக் கனிம வளங்கள் தட்டுப்பாடாகி விட்டது. நினைத்த நேரத்தில் வீடு கட்டுவதற்குக் கனிம வளங்கள் வாங்க முடியவில்லை. இதை ஆளும் அரசு கண்டு கொள்வதும் இல்லை.

இதற்காகத் தொடர்ந்து போராடிவரும் எங்கள் இயற்கை வளப் பாதுகாப்புச் சங்கத்தைப் போராட விடாமல் அரசு தடுக்கிறது நாங்கள் போராட்டத்திற்கு இசைவு கேட்டால் மறுக்கிறது. எங்கள் சங்க உறுப்பினர்கள் மீது காவல்துறை வழக்கு பதிவு செய்கிறது. இதையெல்லாம் தாண்டி தான் கனிமவளக் கொள்ளைக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகிறோம்

எதிர்காலத் தலைமுறையினர்களையும் வேளாண்மையையும் கருத்தில் கொண்டு அரசு அண்டை மாநிலங்களுக்குக் கனிம வளங்கள் கொண்டு செல்வதை நிலையாகத் தடை செய்ய வேண்டும் என்பதே எங்களது தொடர்ச்சியான கோரிக்கை. □




மதுரை.. மணியம்மை பள்ளியில் மார்ச்சு 5 அன்று புரட்சிக் கவிஞர் மன்றம் ஒருங்கிணைப்பில்.. மணியம்மை பள்ளித் தாளாளர் பெரியாரிய நெறியாளர் ஐயா பி வரதராசன் அவர்களின் முழு ஏற்பாட்டிலும் தலைமையிலும் திருக்குறள் ஒப்பாய்வுரை நூல் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது தோழர் பொழிலன் ஏற்புரை செய்தார்.

மதுரை .. செல்லூரில்.. மார்ச்சு 5 அன்று தமிழகப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் தமிழ்நாட்டுக் கலை விழா தோழர் க இரா தமிழரசன் ஒருங்கிணைப்பில், தோழர் மெய்யப்பன் பொறுப்பில் எழுச்சியுடன் சிறப்பாக நடைபெற்றது



## அருந்ததியர்கள் தமிழர்களா, அல்லரா?

# யாரெல்லாம் தமிழர்கள்!..

## தமிழக மக்கள் முன்னணி விளக்க அறிக்கை!

ஈரோட்டு இடைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விசயநகரப் பேரரசுக் காலத்தில் தூய்மைப் பணிக்காக வந்தவர்கள், அல்லது அழைத்து வரப்பட்டவர்களே அருந்ததியர்கள் □ என்றும், அதற்கு முன்னர் தூய்மைப் பணி செய்து கொண்டிருந்த தமிழர்கள் அப்பணிகளை விசயநகரப் பேரரசுக்குச் செய்ய மறுத்ததால் அருந்ததியர்கள் அழைத்து வரப்பட்டனர் என்றும் பேசிய பேச்சையொட்டித் தன் புனைவுக் கருத்தை வெளிப்படுத்தியிருப்பதுடன் அருந்ததியர்கள் தமிழர்கள் அல்லர் என்பதான கருத்தையும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்..

அவரும் அவரின் நாம் தமிழர் கட்சியும் தமிழ்நாட்டிற்குள் பிறப்பால் தமிழர்களாக இருப்பவர்கள் மட்டுமே வாழலாம், ஆளலாம் மற்றவர்கள் வாழ மட்டுமே செய்யலாம் ஆனால் ஆள முடியாது!.. □ என்ற கருத்தைக் கொள்கையாக உடையவர்கள்..

அந்த வகையில்தான் அருந்ததியர்களை வந்தவர்கள், அல்லது விசயநகர ஆட்சியர்களால் அழைத்து வரப்பட்டவர்கள் என்றும்,

அவர்கள் தமிழர்கள் அல்லர் என்றும், எனவே அவர்கள் தமிழ்நாட்டில் வாழ மட்டுமே தகுதி உடையவர்கள், ஆளுவதற்கான தகுதி அவர்களுக்குக் கிடையாது என்கிற கருத்தில் நாம் தமிழர் கட்சி அறிவித்திருக்கிறது..

நாம் தமிழர் கட்சியின் இந்த அறிவிப்பை, கருத்தை மிகப்பெரும் மன உளைச்சலோடு மிகக் கடுமையாக மறுக்கும் வகையில் அருந்ததியர்கள் தமிழர்கள்தாம் என்று அருந்ததியர்களின் அமைப்புகள் இயக்கங்கள் பல போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களைச் செய்து தங்களின் மறுப்புக் கருத்தைப் பதிவு செய்து வருகின்றன.

அருந்ததியர்கள் தமிழர்கள்தாம் என நிறுவுவதற்காக ஆங்காங்கே எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்களை, நூல்களைத் தேடிப் பதிவு செய்கின்றனர்..

அத்தகைய கருத்துகளில் எது சரியானது என்று முடிவு செய்வதற்கு முன்பு அந்தக் கேள்வியே எந்த வகையில் தவறானது அஞ்சத்தகுந்த விளைவுகளை ஏற்படுத்தவல்லது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்..

பிறப்பின் அடிப்படையில் ஒரு மொழி இனத்தினைச் சார்ந்தவர்கள்தாம் ஒரு தேசத்தில் வாழ வேண்டும் அல்லது ஆள வேண்டும் என்கிற வகையில் உலகில் எந்த நாடும் இருப்பதில்லை..

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ஒபாமா அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்தானேயன்றி அவர் கென்ய இனத்தைச் சார்ந்தவர்.

பிற மொழி இனத்தினர் ஆட்சிப் பொறுப்பில் இருக்கக் கூடாது என்று சொன்னால் சிங்கப்பூரிலோ மலேசியாவிலோ மொரிசியசிலோ அமைச்சர்களாகத் தமிழர்கள் பொறுப்பேற்பது என்ன வகையில் ஞாயமானது என அக்கருத்துடையவர்கள் எண்ண வேண்டும்..

கருநாடகாவில் `மேயரா`கவும், மும்பை, கேரளம் உள்ளிட்ட பல இடங்களில் அதிகாரப் பொறுப்புகளிலும் தமிழர்கள் இருக்கக் கூடாது என்றல்லவா சொல்ல வேண்டி வரும்.. அவ்வாறு இருக்கிற தமிழர்களை நீக்கம் செய்யவல்லவா இங்குள்ள அக்கருத்துடையவர்கள் போராடியாக வேண்டும்..

அவை ஒரு புறம் இருக்க.. இனம் என்பது வேறு, தேசிய இனம் என்பது வேறு என்பதை முதலில் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒருவர் ஓர் இனத்தைச் சார்ந்தவர் என்று அடையாளப்படுத்துவதற்கு மொழி ஒன்று மட்டுமே போதுமானது. ஆனால் ஒருவர் ஒரு தேசிய இனத்தைச் சார்ந்தவர் என்று அடையாளப்படுத்துவதற்கு மொழி மட்டுமே போதுமானதன்று..

பொதுவான மொழி, பண்பாடு, அரசியல், பொருளியல், நீண்ட நெடிய வரலாறு இவையெல்லாம் தேவைப்படுகின்றன..

பாஜகவின் தலைவர் அண்ணாமலையையோ, அல்லது வானதி சீனிவாசனையோ, உலக அளவில் பணக்காரர்களின் வரிசையில் இருக்கிற சிவ நாடாரையோ, இந்திய அதிகார வகுப்பின் ஆண்டைகளாக இருக்கும் தமிழ்த் தாய் மொழியினர் பிறரையோ தமிழர்கள் என்று பெருமை கொள்ள முடியுமா?

அவர்களெல்லாம் மொழியால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாக இருக்கலாம்.. ஆனால் இந்திய அரசு அதிகாரத்தின் கீழும், வல்லரசிய கார்ப்பரேட் முதலாளிய அதிகாரங்களின் கீழும், பார்ப்பனிய □ சாதிய □ மதவாத அதிகாரங்களின் கீழும் அவர்கள் தங்களைத் தமிழ்த் தேசிய இனத்தினராகக் கருதுவதோ பதிவு செய்திடுவதோ இல்லை..

அவர்களெல்லாம் தங்களை இந்திய அதிகாரங்களோடு, வல்லரசியச் சுரண்டல் அதிகாரங்களோடு இணைத்துக் கொண்டிருப்பவர்களாகவே உள்ளனர். அவர்களேகூடத் தங்களைப் பாரதத்தினர் என்று சொல்லிக் கொள்கிறார்களேயன்றி தமிழர்கள் என்று பறைசாற்றுவதில்லை.. பாரதம்.. பாரதம்.. □ என்று மூச்சுவிடும் அவர்களுக்குத் தமிழர்கள் □ தமிழ்நாடு என்றாலே மூச்சு முட்டுகிறது..

அவர்களெல்லாம் தமிழ்த் தேசியத்தை, தமிழ்த் தேசிய அடையாளத்தை, தமிழ்த் தேசிய அரசியலை, தமிழ்த் தேசியப் பொருளியலை, தமிழ்த் தேசிய வாழ்வியலை, தமிழ்த் தேசிய வரலாற்றை, தமிழ்த் தேசியப் பண்பாட்டை ஏற்காத நிலையில், அவர்கள் எவரையும் நாம், தமிழர்கள் என்று ஏற்றுக்கொள்ள இயலாது..

ஆக, எவர் எவர் தமிழ்த் தேசிய அடையாளங்களை, தமிழ்த் தேசிய வாழ்வியலை, தமிழ்த் தேசிய அரசியலை, தமிழ்த் தேசியப் பொருளியலை, தமிழ்த் தேசிய வரலாற்றை, தமிழ்த் தேசியப் பண்பாட்டை ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களை மட்டுமே தமிழர்கள் என்று அடையாளப்படுத்த முடியும்..அணி சேர்க்க முடியும்..

அவ்வகையில்தான் தமிழ்நாட்டில் நீண்ட நெடிய காலம் உழைப்போடு பிணைந்து தன் உழைப்பை இந்தத் தமிழ்த்தேசத்தின் நலனுக்காக ஈடுபடுத்துபவர்களோ அவர்களே தமிழர்களாக இருக்க முடியும்..

தமிழ்நாட்டின் கனிம வளங்களைச் சூறையாடிச் செல்லுகிற, தமிழ்நாட்டின் வளங்களைச் சூறையாடிச் சென்று வணிகம் செய்து கொழுக்கிற, தமிழ்நாட்டு மக்களின் உழைப்பைப் பறித்து அண்டை அயல் நிலங்களுக்குக் கொண்டு சென்று கொழுக்கிறவர்களை எந்த வகையிலும் தமிழர்கள் என்று ஏற்க முடியாது..

எனவே, தங்களைத் தமிழ்த் தேசிய இனத்தினர் என்று ஏற்றுக் கொள்கிறவர்கள் எவரோ, அத் தேசிய இனத்தின் எவ்வகை நலன்களும் கெட்டுவிடாத படி பாதுகாத்துக் கொள்ளுகிறவர்கள் எவரோ அவர்களே தமிழர்கள்..

இத்தகைய புரிதல்களில் இருந்து பிற நாடுகளில், பிற தேசங்களில் உள்ள தாய்மொழித் தமிழர்களை எவ்வாறு மதிப்பிடுவது என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்..

ஒரு மொழி மக்களை மட்டுமே கொண்டிருந்த பழங்காலத் தேயங்கள், நாடுகள்கூட அண்டை மொழி இனத்தினர் வந்து வாழ்ந்த நிலைகளைக் கொண்டிருந்தன என்பதை அறியலாம். அவ்வாறு இருக்க இன்றைக்கு உலகெங்கும் வாழ்கிற எல்லா தேசங்களிலும் நாடுகளிலும் சிறுபான்மை அளவில் அண்டை மொழித் தேசத்தினர் இணைந்து வாழவே செய்கின்றனர்..

300, 400 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் மலையகத்திற்கும், மொரிசியசிற்கும், மராட்டியத்திற்கும், இன்ன பிற நாடுகளுக்கும் சென்று வாழத் தொடங்கி, ஆங்காங்கேயே இணைந்து கலந்து உழைத்து அந்தந்த நாடுகளை மேம்படுத்தி நிறுத்தி வாழ்ந்து வருகின்றனர்.. அந்தந்த நாடுகளின் வளர்ச்சிக்கு அங்கு சென்று வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களின் உழைப்பும் பெரும்பங்குடையவை.

மலேசியத் தேசத்தின் தேசிய இன உரிமைகள் அனைத்தும் அங்குள்ள தமிழர்களுக்கும் உண்டு என்பது போல்.. மொரிசியசிலும், மராட்டியத்திலும், கர்நாடகாவிலும், கேரளத்திலும் இன்ன பிற தேசங்களிலும் சென்று தம் உழைப்பை முழுவதும் கொடுத்துப் பணியாற்றிவருகிற தமிழர்களுக்கும் அங்கெல்லாம் அத்தகைய உரிமைகள் உண்டு, இல்லையேல் அவற்றைப் போராடிப் பெற்றாக உரிமை உண்டு.

எனவே பிற தேசங்களில் நீண்ட நெடிய காலத்திற்கு முன்பே குடியேறி உழைத்து அங்கேயே தம் வாழ்நிலையை அமைத்துக் கொண்டிருக்கிற தமிழ்த் தாய் மொழியினர் மொழி அளவில் தங்களைத் தமிழர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டாலும் தேசிய அளவில் அந்தந்தத் தேசத்தின் இன மக்களாகவே இருக்க முடியும் என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்..

அதேபோல்தான் விசயநகரக் காலங்களில் தமிழ்நாட்டில் குடியேறி இங்கேயே தம் வாழ்நிலையையே, இம் மண்ணின் அரசியலையே, பொருளியலையே அமைத்துக் கொண்டிருக்கிற மக்களுள் பலர், தங்கள் வீட்டளவில் தெலுங்கு, கன்னட மொழிகளை ஏதோ ஒரு வகையில் திரித்துப் பேசினாலும் அவர்கள் தேசிய இன அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தினராகும் வகையில் □ தமிழர்களாகவே இருக்க முடியும்.

அவர்களுள் சிலருக்கு இல்ல மொழி தமிழாகவே இருக்க, மேலும் சிலர் தங்களைத் தங்களின் இல்ல மொழி அடிப்படையில் தெலுங்கர்கள் என்று கூறிக் கொண்டாலும் அது இல்ல மொழி அடிப்படையில் பிழையானதும் அன்று..

கருநாடகாவில் நீண்ட நெடுங்காலம் வாழுகிற கருநாடகத் தேசிய உரிமைகளுக்குப் போராடுகிற தாய்மொழித் தமிழர்கள் தங்களைக் கர்நாடகத் தேசிய இனத்தினர் என்றும் அடையாளப்படுத்திக் கொள்ளுகிற அதே போது மொழி வழித் தங்களைத் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வது எப்படி பிழை இல்லையோ அப்படியே தமிழ்நாட்டில் நீண்ட நெடிய காலத்திற்கு முன்பே வந்து உழைப்பிலும், வாழ்விலும் தங்களைத் தமிழ்நாட்டோடு பிணைத்துக் கொண்டவர்கள் தமிழ்த்தேசிய இனத்தின் வழித் தமிழர்களாகவே கருதப்பட வேண்டும்..கருதப்பட முடியும்.., அவர்களுள் சிலர் இல்ல மொழியாகப் பிற மொழி பேசுகிற வகையில் அவர்கள் இல்ல மொழியடிப்படையில் அம்மொழியினராகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டாலும் பிழை இல்லை....

எதையும் அறிவியல் கண்ணோட்டத்தோடும் இயங்கியல் கண்ணோட்டத்தோடும் அளவிடப் பழகுவதே தமிழ்த் தேசிய அரசியலை எழுச்சியோடு வளர வைக்கும்..

■

# இந்தியரா? தமிழரா?

சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழீழத்து உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தன் ஒரு கருத்தரங்கைச் சென்னையில் கூட்டி இருந்தார்..

தமிழ் ஈழ இந்திய நட்புறவுக் கழகம் என்கிற பெயரில் அந்தக் கருத்தரங்கம் கூட்டப்பட்டிருந்தது.

ஒன்று தமிழீழத் தமிழ்நாடு நட்புறவுக் கழகம் என்று அந்த இயக்கம் இருந்திருக்க வேண்டும் அல்லது இலங்கை இந்திய நட்புறவுக் கழகம் என்று இருந்திருக்க வேண்டும்..

மாறாக தமிழ் ஈழ இந்திய நட்புறவு கழகம் என்பதில் தமிழ் ஈழத்தை தமிழினம் என்கிற அளவில் மதிப்பிடுவதும் தமிழ்நாட்டை இந்தியா என்கிற அளவில் மதிப்பிடுவதுமான அரசியல் குறைபாடு வெளிச்சமாகத் தெரிந்தது..

பெரும்பாலான ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டை இந்தியா என்கிற அளவிலேயே அடையாளப்படுத்துவதும் தமிழ்நாட்டிற்கு வருவதை இந்தியாவிற்கு வருவதாகக் குறிப்பிடுவதும் மிகவும் தவறான அடையாளங்கள் ஆகும்..

தமிழ்நாட்டிலேயேகூட உங்களின் தேசியம்(நேஷனாலிட்டி) எது? என்று கேட்போரிடம், எங்களின் தேசியம் இந்தியத் தேசியம் என்பதாக விடை சொல்லவைக்கிற அளவிலேயே இந்திய அரசு அனைவரையும் கட்டாயப்படுத்திப் பழக்கி இருக்கிறது..

தமிழ்நாட்டுத் தமிழர்களின் தேசியம் தமிழ்த் தேசியமே ஒழிய இந்தியத் தேசியமாக இருக்க முடியாது..

வங்காளத்தைச் சார்ந்தவர்கள் வங்காளத் தேசியத்தினராகவும், கர்நாடகத்தைச் சார்ந்தவர்கள் கன்னடத் தேசியத்தினராகவும், கேரளத்தைச் சார்ந்தவர்கள் மலையாளத் தேசியத்தினராகவும், நாகலாந்தைச் சேர்ந்தவர்கள் நாகலாந்து தேசிய இனத்தினராகவும் ஆகிற வகையிலேயே அந்தந்தத் தேசிய இனத்தினராகவே இருக்க முடியும்..

அதுபோல்தான் இந்தி மொழியையும் பண்பாட்டையும் அது சார்ந்த வரலாற்றையும் அரசியலையும் பொருளியலையும் கொண்டிருப்பவர்களே இந்தியத் தேசிய இனத்தினராக, இந்தியராக இருக்க முடியுமே அல்லாமல்.. மற்றவர்கள் இந்தியத் தேசிய இனத்தினராக, இந்தியராக இருக்க முடியாது..

இந்திய அரசியல் சட்டத்தின்படி மற்ற தேசிய இனத்தினர்கள் எல்லாம் இந்தியக் குடிமக்களாக இருக்க முடியுமே அல்லாமல் இந்தியத் தேசிய இனத்தினர் என்று அடையாளப்படுத்துவது அரசியல் பிழையும் வரலாற்றுப் பிழையும் ஆகும்..

ஆனால், தொடர்ந்து இந்தியப் பார்ப்பனிய கருத்தாளர்கள் இஸ்லாமியர்களைத் தனிமைப்படுத்துவதற்காக மற்றவர்களை இந்துஸ்தானிகள் என்பதும், இந்துக்கள் என்பதும், பாரதத்தினர் என்பதும், எப்படியெல்லாம் பிழையானதோ அப்படியே இந்தியர்கள் என்பதும் பிழையானதே..

இந்நிலையில் இன்னொன்றையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இனம் என்பது வேறு, தேசிய இனம் என்பது வேறு. ஆங்கிலத்தில் ரேசு(race) என்றும் நேஷனாலிட்டி( Nationality) என்றும் வேறுபடுத்தி அவற்றைச் சொல்லுகிறார்கள்..

இனம் என்பது மரபு சார்ந்த மொழி இனத்தையே அடையாளப்படுத்தும்.. ஆனால் தேசிய இனம் என்பது மொழியின் வழியாக மட்டும் அடையாளப்படுத்துவதன்று..

தேசிய இனத்திற்கு மொழி அடிப்படையான கூறாக இருப்பது போலவே அரசியல், பொருளியல், வரலாறு, பண்பாடு இவையெல்லாமும்கூட அடிப்படையானவையாக உள்ளன.. எனவே இந்தியாவிற்கு என்று ஒரு பொதுமொழி வரலாற்று அடிப்படையில் இல்லாததாலும், ஒத்த வரலாற்றியல் பண்பாடு இல்லாததாலும், ஒரே தன்மையிலான பொருளியல் வளர்ச்சி இல்லாததாலும், ஒரே குமுகத்தன்மையுள்ள அரசியல் போக்கு இல்லாததாலும் இந்தியாவை ஒரு தேசம் என்று அடையாளப்படுத்த இயலாது..

இந்தியாவிற்குள் அடக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு மொழித் தேசங்களுக்கும் பல்வேறு வகைப்பட்ட பண்பாடும் வரலாறும் அரசியலும் பொருளியலும் உண்டு என்பதை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுதே அறிய முடியும்.. ஆனால், அதை ஒரே பண்பாடுடையது போலவும், வரலாற்றைக் கொண்டது போலவும், குமுக, அரசியல், பொருளியலைக் கொண்டது போலவும் இந்தியப் பார்ப்பனிய அரசு அடையாளப்படுத்துகிறது..

பன்னாட்டு மூலதனத்திற்கும், இந்தியப் பார்ப்பனியத்திற்கும் ஒரே நாடு ஒரே மொழி ஒரே மக்கள் என்கிற அமைப்புமுறையே தங்களின் அதிகாரம் செலுத்துவதற்கு எளிதானதாக இருப்பதால் இந்தியாவை ஒரே நாடு ஒரே மொழி ஒரே மக்கள் என்று வலிய திணித்து அடையாளப்படுத்துகின்றனர்..

அக்கருத்தை மொழித் தேசங்களின் உரிமைகளை நாடி இருக்கிறவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது..

எனவே, இந்தியா ஒரு தேசம் இல்லை என்பதையும்.. அதை ஒரு நாடு என்று அடையாளப்படுத்த இயலாது என்பதையும்.. விளங்கிக் கொள்ளவேண்டும்..

இந்தியா என்பது ஓர் அரசு.. அதுவும் அதிகார வெறி அரசு மட்டுமே.. என்று விளக்கிக்கொள்வோம்..

அந்த வகையில் இந்தியக் குடி மக்களாக இருக்கிற காரணத்தினாலேயே நாமெல்லாம் இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ளவோ அடையாளப்படுத்திக் கொள்ளவோ இயலாது.. கூடாது..

தமிழ்நாட்டில் உள்ள தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமன்றித் தமிழ்த் தேசிய அரசியல் வழித் தங்களைத் தமிழ்த் தேசியர் என அடையாளப்படுத்திக் கொள்ளும், இந்திய, பன்னாட்டு அதிகாரங்களை, சுரண்டல்களை, சூறையாடல்களை எதிர்த்திடும் தமிழ்த் தேசிய உணர்வுடையோர் அனைவரும் தமிழர்களே.. என்று அறிவோம்.

**- பொழிலன்**




அடுத்த இதழில்..
**திராவிடம்.. திராவிடர்..**
அரசியல் விளக்கம்

# பரந்தூர் வானூர்தி நிலையம்

# அமைப்பதற்கு எதிரானப் போராட்டமும், பின்னணியும்

**எஸ். டி. கதிரேசன் பரந்தூர் பசுமை** வானூர்தி **நிலையத் திட்ட எதிர்ப்புக் குழு,**

ஏகனாபுரம் சிற்றூர் குடியிருப்போர் & விவசாய நலக் கூட்டமைப்பு.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து 59 கிமீ தூரத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் பகுதியில் புதிய பசுமை வானூர்தி நிலையத் திட்டத்தை இந்திய, மாநில அரசுகள் அறிவித்துள்ளன. இந்த விமான நிலையம் 4,700 ஏக்கரில் அமையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி 4,700 ஏக்கரில் 2,900 ஏக்கர் நஞ்சை, புஞ்சை விவசாய நிலங்களும், 1,200 ஏக்கர் பரப்பளவு கொண்ட நீர்நிலைகளும் அடங்குகின்றன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவ மன்னன் கம்பவர்மனால்




கட்டப்பட்ட கம்பன் கால்வாய் ஏழு கி.மீ. தூரத்துக்கு அழிக்கப்படுகிறது. பாலாற்றில் இருந்து வரும் உபரிநீர் 73 ஏரிகளை நிரப்பிய பின்னர், 43 கிலோமீட்டர் தூரம் பயணித்து, திருப்பெரும்புதூர் ஏரி வழியாகச் செம்பரம்பாக்கம் ஏரியை அடைந்து சென்னையின் குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. இந்த அமைப்பு முற்றிலுமாகத் தகர்க்கப்படவிருக்கிறது.

இந்தத் திட்டத்தால் **ஏகனாபுரம், மேலேரி, நாகப்பட்டு, நெல்வாய், தண்டலம், மடப்புரம்** ஆகிய ஆறு சிற்றூர்கள் முழுமையாக அழிக்கப்படுகின்றன. மேலும் அக்மாபுரம், பரந்தூர், குணகரம்பாக்கம், சிங்கிளிபாடி, பொடவூர், இடையார்பாக்கம், வளத்தூர் ஆகிய ஏழு சிற்றூர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன.

ஆக மொத்தம் பதிமூன்று சிற்றூர்களின் விவசாய விளைநிலங்களையும், தலைமுறை தலைமுறையாக மக்கள் வாழ்ந்த வீடுகளையும் அழித்து, இப்பகுதியைத் தனியாருக்குத் தாரைவார்க்க ஒன்றிய, மாநில அரசுகள் முனைப்புடன் செயல்படுகின்றன. எனவே இம்மக்கள் புதிய விமான நிலையத்துக்கு எதிராகக் கடுமையாகப் போராடி வருகின்றனர்.

இம்மக்களின் நிலங்களுக்கு .3.5 மடங்கு விலை தருகிறோம், அரசு வேலை தருகிறோம் என்றெல்லாம் மாநில அரசு ஆசை வார்த்தைகள் கூறி வருகிறது. ஆனால் இப்பகுதி மக்களோ அவர்களுடைய நிலங்களை, வீடுகளை, பாரம்பரியத்தை, பூர்வீகத்தை, கலாச்சாரத்தை, கோவில்களை, வரலாற்றை, நினைவுகளை, அடையாளங்களை இழக்கத் தயாராக இல்லை

பரந்தூர் பசுமை வானூர்தி நிலையம் திட்டத்திற்கு எதிராகப் பதிமூன்று சிற்றூர் மக்களும் தத்தம் சிற்றூர்சபைக் கூட்டங்களில் நான்கு முறை தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கின்றனர். பத்துக்கும் மேற்பட்ட முறை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களைச் சந்தித்து, இத்திட்டத்தால் ஏற்படும் பிரச்சினைகளை எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

தமிழ்நாட்டு அரசின் மூன்று அமைச்சர்களோடு இரண்டு முறை பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கின்றனர். ஆனால் தமிழ்நாடு அரசோ அல்லது முதலமைச்சரோ பாதிக்கப்படும் மக்களுக்கு ஆதரவாக இதுவரை எதையும் சொல்லவுமில்லை, செய்யவுமில்லை.

மேற்படி பதிமூன்று சிற்றூர்களில் வாழும் மக்களிடம் இதுவரை கருத்துக்கேட்புக் கூட்டம் எதுவும் முறையாக நடத்தப்படவில்லை. ஆனால் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட காவல்துறை தடுப்புக்கள் அமைக்கப்பட்டு, இம்மக்கள் முள்ளிவாய்க்கால் வதைமுகாம் போன்றதொரு நிலையில் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர்.

போராட்டக் குழுவினர் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து இத்திட்டத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி எடுத்துக் கூறியிருக்கின்றனர். பல சமூகக் களப்பணியாளர்களும் களஆய்வுகள் செய்து, மக்களின் கருத்துக்களைக் கேட்டுப் புதிய விமான நிலையத் திட்டத்தைக் கைவிடும்படி அரசிடம் கோரிக்கை வைத்திருக்கின்றனர்.

பதிமூன்று கிராம மக்களும் உண்ணாவிரதப் போராட்டம், கருப்புக்கொடிப் போராட்டம், சட்ட மாமேதை அம்பேத்கார் சிலையிடம் மனு அளிக்கும் போராட்டம், கிராமசபைக் கூட்டத் தீர்மானம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கிச் செல்லும் போராட்டம், தலைமைச் செயலகம் நோக்கிச் செல்லும் போராட்டம், பள்ளிக்கூடப் புறக்கணிப்புப் போராட்டம், தினமும் நடைபெறும் மாலை நேரப் போராட்டம் என இருநூறு நாட்களுக்கும் மேலாகத் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

ஏராளமான விவசாய விளைநிலங்களையும், குடியிருப்புகளையும் அழித்து வானூர்தி நிலையம் கட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் சென்னை வானூர்தி நிலையத்தின் அருகிலேயே, 59 கிமீ தூரத்தில் இன்னொரு வானூர்தி நிலையத்தைக் கட்டுவது என்பது வானூர்தி நிலைய விரிவாக்கத் திட்டமாகவே அமையும். அது வான்வெளி, தரைவழி போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, ஒலிமாசு, காற்றுமாசு போன்ற மாசுபாடுகளைக் குறைக்க, எந்தவகையிலும் உதவாது.

இலண்டன் ஹீத்ரோ வானூர்தி நிலையத்துக்கும், கேட்விக் வானூர்தி நிலையத்துக்கும் இடையே 45 கிமீ தூர இடைவெளிதான் உள்ளது. நாம் பின்பற்றுவது வெள்ளைக்காரர்களின் வளர்ச்சிச் சித்தாந்தம் என்பதால், இலண்டனைப் பார்த்து அப்படியே செயல்படுகிறோமோ என்கிற எண்ணம் மேலெழுகிறது.

சென்னை மாநகரின் தெற்கே நெருக்கடி குறைந்தப் பகுதியில் புதிய வானூர்தி நிலையம் அமைத்து, நகரின் மையப்பகுதிக்கு மிகுவிரைவுத் தொடர்வண்டி விட்டால், நகரவாசிகளுக்கும் வசதியாக இருக்கும். செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி போன்ற மாவட்ட மக்களுக்கும் அது உதவும். அம்மாவட்டங்கள் வளர்ச்சி பெறவும் புதிய விமான நிலையம் பெரிதும் பயன்படும்.

அந்நிய நாடுகளுக்கும், அவர்களின் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், தனியார் பெருமுதலாளிகளுக்கும், நில வணிகர்களுக்கும், சக்திமிக்க ஒப்பந்தக்காரர்களுக்கும், இடைத்தரகர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் ஏராளமாக கமிஷனும், கையூட்டும் பெற்றுத்தரும் இந்தத் திட்டம் மக்களுக்கானத் திட்டம் அல்ல.

புதிய வானூர்தி நிலையம் திட்டமிடப்படும் நிலையிலேயே மேற்படி பதிமூன்று சிற்றூர்களைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் சொத்து விலை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. வானூர்தி நிலையத்துக்காக ஓர் ஏக்கர் நிலத்தை விற்கும் ஒருவர் அந்தத் தொகையைக்கொண்டு அருகமைப் பகுதிகளில் 10 சென்ட் நிலத்தைக்கூட வாங்க முடியாது என்பதுதான் மெய்யான கள நிலவரம்.

தமிழ்நாடு அரசு காவல்துறையை வைத்து எத்தனை அடக்குமுறைகளைக் கையாண்டாலும், போராட்டம் தொடரும். புதிய வானூர்தி நிலையத் திட்டத்தை அரசு கைவிட்டால் மட்டுமே போராட்டம் நிறுத்தப்படும்.

# தமவிஇ திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் தோழர் வீரபாண்டியன் மீது கொடூரத் தாக்குதல்..

## தமிழக மக்கள் முன்னணியின் கண்டன அறிக்கை.

கடந்த 23/02/2023 அன்று தமிழக மக்கள் விடுதலை இயக்கத்தின் திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் தோழர்.வீரபாண்டியன் அவர்கள் பட்டுக்கோட்டையில் இருந்து முத்துப்பேட்டை நோக்கி பரக்கலக்கோட்டை எனும் இடத்தில் அவரது இருசக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது பிற்பகல் 3.00 மணியளவில் அவர் வண்டியின் பின்புறத்தில் இருந்து வந்த ஒரு மகிழுந்து அவரது வண்டியின் மீது மோதியுள்ளது. இதனால் நிலை தடுமாறிக் கீழே விழுந்து காயங்களுடன் கிடந்த தோழர் வீரபாண்டியனை மகிழுந்தில் இருந்து இறங்கிய அடையாளம் தெரியாத ஆறு பேர் கொண்ட குழுவினர் அவர்கள் மகிழுந்திலிருந்து எடுத்துவந்த உருட்டுக் கட்டைகளால் கடுமையான கொலை வெறி தாக்குதல் நடத்தியுள்ளனர். அதோடு நில்லாமல் கொலை செய்யும் நோக்கில் அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியால் குத்தியுள்ளனர். அதைத் தோழர் வீரபாண்டியன் தடுத்தபோது அவரது கையில் கடுமையான வெட்டுக்காயம் ஏற்படுகிறது. அந்த நேரத்தில் அவ்வழியே மக்கள் வருவதைப் பார்த்த அக்கும்பல் அப்படியே அவரை விட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. அவர்கள் வந்த அந்த மகிழுந்து வெளிர்மஞ்சள் நிறத்தில் இருந்துள்ளது. அடைபட்டுக் கிடந்த மயக்கத்தில் அம்மகிழுந்தின் பதிவெண்ணைப் பார்க்க முடியவில்லை. கத்தியால் குத்தும் போது அக்கும்பலில் இருந்த ஒருவன் "நீ முத்துப்பேட்டையில் பெரிய ஆளாடா ; நாங்கள் இல்லாட்டியும் வேறு யாராவது உன்னைப் போட்டுத் தள்ளாமல் விடமாட்டார்கள்; சீக்கிரம் உன்னைக் கொலை செய்வோம்; உன் இயக்கத்தை வைத்து எங்களை ஒன்றும் புடுங்க முடியாது." எனக் கொலை மிரட்டல் விடுத்துள்ளான்.

தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத் தோழர்களுக்கு உடனே தகவல் கொடுக்கப்பட்டுத் தோழர்கள் விரைந்து சென்று தோழர் வீரபாண்டியனை மீட்டுத் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். வெட்டுப்பட்ட இடத்தில் ஆறு தையல்கள் போடப்பட்டு உள்நோயாளியாக ஐந்து நாள்கள் சிகிச்சை பெற்றுப் பின்னர் வீடு திரும்பி இருக்கிறார்.

இந்த நிகழ்வு குறித்து அதிராம்பட்டினம் காவல் நிலையத்தில் கடந்த 25/02/2023 அன்று முறையீடு கொடுக்கப்பட்டுள்ளது.

காவல்துறையினர் உடனடியாக விரைந்து சென்று பரக்கலக்கோட்டையில் உள்ள ஒரு கண்காணிப்பு 'கேமரா'வை ஆய்வு செய்ததில், குறிப்பிட்ட நிகழ்வு நடந்த அந்த நேரத்தில் வெளிர்மஞ்சள் நிற டாட்டா இண்டிகோ மகிழுந்து அந்த வழியே வேகமாகச் சென்றுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். தோழர் வீரபாண்டியன் கொடுத்த முறையீட்டின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை எண்:48 இந்திய தண்டனைச் சட்டம் 279,337 ,341, 324,506(2)உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அதிராம்பட்டினம் காவல்துறையினர் மேற்படி அப்பகுதிகளில் சுற்றியுள்ள கண்காணிப்புக் கேமராக்களை மேலும் ஆய்வு செய்யவும் இல்லை, அடுத்தபடியாக வழக்கு குறித்த எந்த மேல் உசாவலையும் நடத்தி முறையீட்டாளருக்கு இதுவரையில் தெரிவிக்கவும் இல்லை.

எனவே தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் சார்பாக "பரக்கலக்கோட்டையில் மகிழுந்தைக் கொண்டு மோதியும், கத்தியால் குத்தியும் கொலை செய்ய முயற்சி செய்த மர்மக்கும்பலை உடனே கைது செய்ய வலியுறுத்தியும், தோழர் வீரபாண்டியன் அவர்களுக்கு ஆயுதம் ஏந்திய காவலர் பாதுகாப்பும் வழங்க வலியுறுத்தியும்" மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் முத்துப்பேட்டையில் நடத்த முடிவு செய்யப்பட்டு இசைவு கோரப்பட்டது. ஆனால் அப்பொதுக்கூட்டத்திற்கான அனுமதியும் முத்துப்பேட்டை காவல்துறையினரால் மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் முத்துப்பேட்டையில் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் கிளை அமைக்கப்பட்டுக், கொடி ஏற்றப்பட்டுப், பெயர் பலகையும் வைக்கப்பட்டது. ஆனால் அந்நிகழ்வை முத்துப்பேட்டையில் இயங்கி வரும் பாஷகவினர் கடுமையாக எதிர்த்துள்ளனர். தோழர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் அவர்கள் கூட இருக்கலாம் என்று தோழர்கள் ஐயம் கொள்கின்றனர்.

எனவே, தஞ்சை மாவட்டக் காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்துத் தாக்குதல் நிகழ்வில் ஈடுபட்ட அந்தக் கும்பலை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்றும் தமிழக மக்கள் முன்னணி வலியுறுத்துகிறது.

பரமக்குடியில் மார்ச்சு 4 அன்று நடைபெற்ற

**தோழர் சந்திரபோசு அவர்களின்**

படததிறப்பு நிகழ்ச்சியின்போது..



# இலண்டனில் இராகுல் காந்தி பேசிய பேச்சு..

ஒருமுறை 5 பேர் கொண்ட குழு ஒரு இஸ்லாமியரை அடித்துக் கொன்றது. கொன்று விட்டு 5 பேரில் ஒருவரான சாவர்க்கர் கூறியது, 'அவனை அடித்துக் கொன்ற அந்த நாள் எனக்கு மகிழ்ச்சியான நாள்'

மேற்கண்ட தகவல் இராகுல் காந்தி மார்ச் முதல் கிழமையில் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இலண்டனில், இலண்டன் வாழ் இந்தியாவைச் சார்ந்தவர்களிடம் பேசியது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், இலண்டன்வாழ் இந்தியாவைச் சார்ந்தவர்கள், செய்தியாளர்கள், இங்கிலாந்து நாடாளுமன்றம் ஆகிய பல்வேறு இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் இராகுல் காந்தி உரையாற்றி இருக்கிறார். அவர் பேசிய பெரும்பாலான கருத்துகள் இந்திய ஒன்றியத்தை, ஒன்றியத்தில் நடக்கும் ஆட்சியைத் திறனாய்வு செய்வதாக இருந்தது.

இந்திய ஒன்றியத்தில் எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவர்களை அச்சுறுத்துவது, இஸ்ரேலில் இருந்து இந்தியாவைப் பாதுகாப்பதாகக் கூறிப் பல ஆயிரம் கோடிச் செலவு செய்து வாங்கப்பட்ட பெகாசஸ் மென்பொருளைத் தவறுதலாகப் பயன்படுத்தி உள்நாட்டில், தனக்கு எதிரானவர்களின் பேச்சுகளை ஒட்டுக் கேட்பது இந்திய சனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஊடகங்கள், நீதித்துறை, பல்வேறு அரசு சாரா அமைப்புகள், நாடாளுமன்றம் ஆகியவற்றை ஆர் எஸ் எஸ், பாஜக கைப்பற்றியுள்ளது. பெரும்பாலான இந்திய ஊடகங்களை மிரட்டிப் பணிய வைத்து அல்லது தனக்கான நண்பர்களின் மூலமாக ஊடகத்தின் பங்குகளை வாங்கிக் கைப்பற்றித் தனதாக்கிக் கொள்வது போன்ற வன்முறையில் ஈடுபட்டு வருகிறது ஆர்எஸ்எஸ் பாஜக அரசு. சிறுபான்மை மக்கள், தலித்துகள், பழங்குடியின மக்கள் மீதான தாக்குதல்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்றன. நாட்டின் உள்கட்டமைப்பை உடைக்கிறார் மோடி. இந்திய நாடு பல்வேறு மாநிலங்களின் ஒன்றியம் என்றும் உங்களின் கருத்தை வலுக்கட்டாயமாகத் திணித்தால் அது எதிர்வினை ஆற்றும் என்றும் எச்சரித்து இருக்கிறார் இராகுல் காந்தி.

பிபிசி யின் தாக்குதலைக் கண்டித்திருக்கும் அவர், அவருக்கு இணக்கமான செய்தியாளர்களுக்குப் பரிசும் கௌரவமும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் வளங்கள் அவரின் நண்பர்களான ஓரிருவருக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

வெருப்புணர்வு, வன்முறை, பொதுமக்கள் மீது தாக்குதல் ஆகியவை மாநில அரசுகளின் துணையோடு நடைபெற்று வருகின்றன எனப் பேசி இருக்கும் இராகுல் காந்தியை இந்தியாவில் உள்ள பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இராகுல் காந்தியை இத்தாலி நாட்டுக்காரர் எனச் கூறியிருப்பது கண்டனத்துக்குரிய ஒன்றாகும்.

இவர்களின் போக்கு இப்படித்தான். மோடிக்கு எதிராகப் பேசினால் இந்தியாவின் தேச விரோதிகள் என்றும், ஆர்எஸ்எஸ்க்கு எதிராகப் பேசினால் அவர்கள் வெளிநாட்டுக்காரர் என்றும், வெளிநாட்டில் போய் பேசினால் இந்தியாவை விமர்சனம் செய்து விட்டார் என்றும் நாடாளுமன்றத்தில் அவையை நடத்தவிடாமல் ஆளுங்கட்சியினரே போராடுவது எந்த வகை சனநாயகம் என்று தெரியவில்லை.

– பா.மு. உவைசு

# பன்முகச் சேர்க்கையின் வெளிப்பாடாகத் திகழ்ந்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்



–பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம்,

*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

பெருஞ்சித்திரனார் காலத்தில் கவியரசர்கள் கவிச்சக்கரவர்த்திகள் கவிக்கோக்கள் எனப் பெயர் சூட்டிக் கொண்டவர்கள் கவிஞர்களாக இருந்து வந்தார்கள்.

துரை மாணிக்கம் என்னும் இயற்பெயர் கொண்ட பாவலரேறு என்பதைத் தன்னுடைய பாத்திறனுக்கு முன் ஒட்டாக வரித்துக் கொண்டார். ஏறு என்பது தமிழ்த்திணை கருப்பொருளில் இருந்து (பதினான்குள் ஒன்றாகிய) எடுத்தாண்டதுதான்.பாவலரேறுவுக்குள் அரசோ, கோக்கலோ, சக்கரவர்த்திகளோ எதுவும் இல்லை.

கண்ணதாசன்களாகவும் கம்பதாசன்களாகவும் ஆழ்வாருக்கு அடியான்களாகவும் கவிஞர்கள் புனைப்பெயரில் வெளிப்பட்டு கொண்டிருந்த காலத்தில் திணை இலக்கியக் கவிஞனாகப் பெருஞ்சித்திரனாரைத் தமிழ்ச் சமூகத்தின் மீள் நினைவுக்குள் கொண்டு வந்து சேர்த்தார்.

பாவலரேறு என்றாலே முதன்மை நிலையிலே நமக்குத் தெளிவு கிடைத்து விடுகிறது. எந்த விழுமியங்களைத் தமது வருகையின் மூலம் வெளிப்படுத்த எண்ணுகிறார் என்பதே மிக முக்கியமானதாகும். பாவலரேறு அவர் காலத்திய முக்கிய சிக்கலை அவர் எதிர்கொண்டவகைதான் அவரது மேன்மையான ஆளுமையாகும்.

அவர் காலத்திய குறிப்பான சிக்கலை அவரின் மேதமையால் எதிர்கொண்டு வந்தார். அதில் தான் பாவலரேறுவின் சிறப்பு இருக்கிறது.

பாவலரேறுவின் காலக்கட்டம் மிக முக்கிய உரையாடலுக்கு உரியன. குறிப்பாக 80-கள்,90-களின் காலக்கட்டம் என்பது இந்தியத் தேசியத்தினுடைய சிக்கல் வாய்ந்த கட்டமாகும் 80 கள் முடிவு வரை சோவியத் தகர்வு நடந்து முடியவில்லை. சோவியத்துத் தகர்வுக்குப் பிறகு ஒரு துருவமயமாதல் உலகம் நடந்தேறுகிறது. பின்னர்தான் பலரும் ஐரோப்பிய, அமெரிக்க உலகவயமாதலை நோக்கி நகர்கிறார்கள். அதுவரை இந்திய நாடு சோவியத்து யூனியனோடு ஒரு நல்லுறவைப் பேணி வருகிறது. தொடர்ச்சியாகக் காட்டிக் கொள்கிறது. ஆனால் அடி ஆழத்தில் உள்ளுர நீர் பூத்த நெருப்பாய் 'இந்துத்துவம்' புதைந்துள்ளது. வெளிப்புறத்தில் ஓர் அயலுறவு கொள்கையாகச் சோவியத் ரசியஆதரவு உள்ளதைப் பார்க்கிறோம். இவ்விடத்து நினைவில் கொள்ள வேண்டிய ஒன்று உண்டு. ரஷ்யாவை விட்டால் அன்றைய நிலையில் வேறு மாற்று என்ன? இரும்புத் தொழிலோ கனரக தொழிலோ என்ற வகையில் இந்தியாவுக்கு உதவுபவர்கள் அவர்களைத் தவிர வேறு யாரும் இலர்.

சோவியத்துத் தகர்வுக்குப் பிறகு இந்தியா விரைவாக உருண்டோடிப் போய் அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆதரவு நிலைக்குப் போய்விடும் தந்திரம். இந்த உலகவயக் கட்டத்தில் இன விடுதலை, மொழி விடுதலை, பண்பாட்டு விடுதலை, சமூக விடுதலை என்கிற கருத்தோட்டமெல்லாம் இந்திய அரசு ஏற்றால்தான் உண்டு. தூக்கி எறிந்தால் ஒன்றும் செய்ய இயலாத அவலம். கூட்டாட்சியாகவும் இல்லை. அரசமைப்பு உறுதி அளித்த மொழி, பண்பாடு, மாநில உரிமை போன்ற தனித்துவங்களைப் பேணிக் கொள்ளுதல் என்கிற எந்த மரியாதையும் அளிக்காத ஏதேச்சை அதிகார இந்திய அரசாக இயங்குவதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

இந்தப் புள்ளியில்தான் பாவலரேறு தொடர்ந்து எது நீதியானது? எது வரலாற்றுப் பூர்வமானது? என்கிற உரையாடலை ஆற்றல் மிகு மொழியில் வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார். மூன்று செய்திகளின் ஓர் இணைப்பு புள்ளியாகப் பாவலரேறு திகழ்ந்தார்.

ஒன்று : மறைமலை அடிகள் வழிகளான தனித்தமிழ் இயக்கத் தொடர்ச்சி.

இரண்டு : பெரியார் ஈ.வே.இரா.வழியிலான சுயமரியாதை இயக்கத் தொடர்ச்சி.

மூன்று : பாராளுமன்றவாதக் கம்யூனிஸ்டுகள் மீதானஅவ நம்பிக்கையிலிருந்து வெடித்துக் கிளம்பிய மார்க்சிய, இலெனினியத் தொடர்ச்சி.

இம்மூன்றின் சங்கமமும் இதை மொழிப்படுத்தும் போதொரு திணை இலக்கியத் தமிழுமான ஒன்றாகப் பாவலரேறுவை வரையறுக்கலாம். இதன் துணையாகப் பாரதிதாசனின் மொழி வீச்சைச் சில இழைகளில் காணலாம். பாரதிதாசனிலிருந்து பல படிகள் முன்னேறி இன்னொரு வேகமான மொழி வீச்சை எட்டி இருப்பதைப் பாவலரேறுவிடம் அவதானிக்கலாம்.அதற்கு மூலக் காரணம் அவரது காலக்கட்டம் அவருக்கு அளித்த புறநிலை அழுத்தமே ஆகும்.அதுவே பாவலரேறுவின் மொழி உச்ச கொதிநிலையை அடைவதற்கான சமூகவியல் காரணம் எனலாம். ஆனால் பாரதிதாசனுக்குக் கிடைத்த விடுதலை பெற்ற இந்தியாவின் அரசு, பொருளாதாரம். பண்பாட்டுக் களம் ஆகியவற்றில் ஏற்பட்ட தோல்வியும் தொடர் மந்த நிலையும் விளைவாக ஏற்பட்ட சோர்வும் ஆகும். மறுமுனையில் பாவலரேறு இந்திய அரசின் தோல்வியைத் தேசிய இனங்களின் எழுச்சியோடு போர் குணத்துடன் எதிர்கொண்டு அணியம் ஆகிவிட்ட நிலையே இந்தப் பாய்ச்சலுக்குக் காரணமாகும். நிற்க.

அன்றைய காலக்கட்டத்தில் ஈழ விடுதலை ஆதரவு என்ற நிலை இந்திராவின் மீதும் காங்கிரஸ் மீதும் கொண்ட ரசிகர் தன்மையோடு இயங்கிய நிலை இருந்தது. அப்படியான ஒரு நிலை ஈழ ஆதரவு என்கிற களத்தில் பாவலரேறுவிடம் இருந்ததே இல்லை. சிங்களர்களை அடிபணிய வைக்க புலி ஆதரவு, புலிகளைச் சரிகட்ட சிங்கள அரசு ஆதரவு என்னும் தந்திரமான உள்நோக்க, உத்தி கொண்ட இந்திய அரசின் இரட்டைத் தன்மையும் பாவலரேறுவிற்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்திருந்தது.

தமிழக அரசியல் களத்தில் எம்ஜிஆர் (அரசியல் கட்சி) நெடுமாறன் (சமூக இயக்கம்) போன்றோர் இந்திய அரசின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப ஈழ ஆதரவு, புலிகள் ஆதரவு என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தனர். இவ்வகையான ஆதரவு செயல்பாட்டுக்குப் பின்புறத்தில் இந்திய அரசு ஆதரவு என்னும் பாதுகாப்பான அமைவு நிலை ஒளிந்திருந்தது. மேலும் இவர்கள் வரலாற்று அளவிலான வைதீகத்தின் கேடுகளைத் தமிழ்நாடு முழுவதும் எதிர்த்துச் சமராடும் போக்கு கொண்டவர்களாகவும் இல்லை. பாவலரேறுவின் நிலை இதுவல்ல. இந்திய அரசு புலிகளுக்கு ஆதரவு அளித்தாலும் ஆதரவு அளிக்காவிட்டாலும், காங்கிரஸ் ஆதரவு அளித்தாலும் அளிக்காவிட்டாலும், தமிழக அரசு ஆதரவு அளித்தாலும் அளிக்காவிட்டாலும், தேசிய இன விடுதலைக்கு ஈழ விடுதலை என்பது இன்றியமையாததோர் அடைவு என்பதே பாவலரேறுவின் கண்ணோட்டமாகும். ஈழ ஆதரவு சார்ந்து எத்துணைத் துன்பம் வந்தாலும் அதற்கான விலையைத் தர அணியமாக இருந்தார். இந்த நிலைமை வேறெந்த அமைப்புக்கோ தனி மனிதருக்கோ அந்தக் கட்டத்தில் இல்லை. திராவிடர் கழகம் என்கிற அமைப்பு தவிர வேறெந்த அமைப்புக்குமில்லை.

90-களில் நிலைமை இன்னும் சிக்கலானது. பாவலரேறுவுக்கு இச்சூழலில் கிடைத்த காலம் அளித்த அரிய வாய்ப்பு அவரின் முழு ஆற்றலும் வடிந்து நின்ற அவரது எழுத்தே ஆகும். தனித்தமிழில் அவர் நடத்திய இதழ்கள் தனித்தமிழ் இதழ் என்கிற வகைமைக்கான பரிசோதனை முயற்சி என்ற அளவில் மட்டும் குறுகாமல் இன விடுதலை செயல்பாட்டின் இதயமும் மூளையுமாக இருந்தது. பாவலரேறுவின் மிக முக்கிய பன்முகமய தனி வழியாகும்.

'அகண்டதமிழகம் ' மாதிரியான கருத்தியலோடு இருந்த அமைப்பு ஒன்றின் இதழ் வெறும் நிலமாக மட்டும் தேசிய இனப் பிரச்சனையைச் சுருக்கிக் கொண்டு செயல்பட்டு வந்தது. மற்றபடி மொழிக் கொள்கை, இனக் கொள்கை, பண்பாட்டுக் கொள்கையோ அவர்களுக்கு அறவே இல்லை.

மொழிக் கொள்கையைப் பேசுவோர், இனக் கொள்கையைப் பேசுவதில்லை. இனக் கொள்கையைப் பேசுவோர், பண்பாட்டுக் கொள்கையைப் பேசுவதில்லை. பண்பாட்டுக் கொள்கையைப் பேசுவோர் வர்க்கச் சிக்கல்களைப் பேசுவதில்லை. இவையெல்லாம் இணைத்துப் பெரியார், பாவலரேறு ஆகியோர் மட்டுமே பேசி வந்தனர். இதற்குச் சரியான சான்று பகை ஆற்றல்களிடமிருந்து அவர்கள் வாங்கிக் கொண்ட ஈடு இணையற்ற துன்ப துயரங்களே ஆகும். இதை வேறு எவரும் அந்தக் கட்டத்தில் சுமந்ததே இல்லை. பாவலரேறு பெரியாரையும் கடந்து மொழி உரிமை நிலைகளிலும் தமிழ்நாட்டு விடுதலை நிலைகளிலும் அக்கறை செலுத்தியவர்.. ஆற்றலான செயல்பாடுகள் கொண்டவர்..

வெறும் ஈழ விடுதலையை ஆதரிப்போர், தமிழகத்தின் ஒரு நூற்றாண்டு சுயமரியாதை முயற்சியின் மீதான அக்கறையைக் கொள்வதில்லை.

இப்படியான போக்குகள் மிகுந்த தமிழ்நாட்டின் சூழலில் பன்முக சேர்க்கையின் வெளிப்பாடாகத் திகழ்ந்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆவார்.

# நாடு கடந்தும் பாப்பனிய, சாதிய வெறித்தனங்கள்..

அமெரிக்காவின் வாசிசங்டன் □சியாட்டில் நகர சபை பெண் உறுப்பினர் **சமா சாவந்த்** அவர்கள் சாதிக்கு எதிராகக் கொண்டு வந்த அவசர சட்டம் பெரும்பான்மை பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் சாதிய பாகுபாடு சட்டவிரோதமானது என அறிவித்த அமெரிக்காவின் முதல் நகரமாக அது மாறி இருக்கிறது.

2020 இல் அமெரிக்காவில் முதன்முறையாகச் சாதிய பாகுபாட்டை எதிர்த்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. சேன் ஷோசில் உள்ள சிசுகோ என்கிற மென்பொருள் நிறுவனத் தலைமையகத்தில் பணிபுரிந்த இந்தியாவைச் சார்ந்த பொறியாளரான தலித் ஒருவரை அந்நிறுவனத்தில் மேல் நிலையில் பணியாற்றும் சுந்தர் ஐயர், இரமணா கொம்பெல்லா ஆகிய இருவர் மீதும் தன்னைச் சாதி அடிப்படையில் துன்புறுத்துவதாகக் கூறி நிறுவனத்தில் முறையீடு அளித்தார்.

அமெரிக்காவின் சட்டத்தில் சாதிய படிநிலைகள் இல்லை என்பதால் அந்த இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க மறுத்து விட்டது நிர்வாகம். இதனைத் தொடர்ந்து அந்தத் தலித் ஊழியர் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை, காரணம் தான் தலித் என்பது தன் நண்பர்களுக்கும், குடியிருக்கும் இடத்திலும் தெரிந்துவிடும் என்பதாலும், தன் பிள்ளைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதாலும் தான் கொடுத்த வழக்கில் பெயர் குறிப்பிட விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்) தொடர்ந்து தொல்லைக்கு ஆளாகியுள்ளார். தனிமைப்படுத்துவது, பதவி உயர்வு ஆகிய நல்வாய்ப்புகளுக்கு இடையூறாக அவர்கள் இருந்தனர்.

பிறகு கலிபோர்னியா மாகாணத்தில் வேலை வாய்ப்பு மற்றும் வீட்டு வசதித் துறைகளில் நீதி (Department of Fair Employment and Housing) வழங்கும் நீதிமன்றத்தில் அந்தத் தலித் ஊழியர் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அங்கேயும் தீர்க்கப்படாததால், பாகுபாடுகளை எதிர்ப்பதில் கலிபோர்னியா மாநிலச் சட்டங்கள் வலிமையானதாக இருந்ததால் கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் ஆர் எஸ் எஸ் இன் துணை அமைப்பான இந்து அமெரிக்க பவுண்டேஷன் (HAF) இந்த வழக்கில் தன்னை இணைத்துக் கொள்ளுமாறு மனு தாக்கல் செய்தது. வேடிக்கை என்னவென்றால் சாதி வெறிபிடித்த பார்ப்பனர்களான சுந்தர் ஐயர், இரமணா கும்பெல்லா ஆகிய இருவரும் தங்கள் மனுவில், தாங்கள் ஒரு மத நம்பிக்கையுடைய இந்துவோ, பார்ப்பனரோ அல்லர் எனக் குறிப்பிட்டுள்ளனர். இவர்களால் பாதிக்கப்பட்ட அந்தத் தலித் நபர், தான் வழிபாடு செய்யும் மத நம்பிக்கையுள்ள இந்து என்றும், கோவிலுக்கு வழக்கமாகச் செல்பவன் என்றும் தன்னைப் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த ஆர்எஸ்எஸ் துணை அமைப்பான எச். ஏ. எப்., தன் மனுவில் சாதிய படிநிலை இந்து மதத்தின் அடிப்படைப் பண்பு என்பதை குறிப்பிட்டுள்ளது, மட்டுமல்லாமல் இந்த அமைப்பு தான் இந்து மதம் சார்ந்தவன், வழக்கமாகக் கோவிலுக்குப் போகின்றவன் என்று சொல்லும் அந்தத் தலித் இளைஞருக்குச் சார்பாக இந்து அமைப்பு இல்லாமல், தான் இந்து இல்லை, கோயிலுக்குப் போவதில்லை எனக் குறிப்பிடும் பார்ப்பனருக்குச் சார்பாகத் தன் நிலையை எடுத்திருப்பது கவனிக்கத்தக்கது.

இந்நிலையில் சுந்தர் ஐயரும், இரமணா கும்பெல்லாவும் எங்கள் மீது வழக்கு தொடுத்த அந்தத் தலித் ஊழியரின் பெயரை நீதிமன்றம் வெளியிட வேண்டும் எனக் கேட்டுள்ளார்கள்.

இன்னோர் உண்மையை அறிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது. சுந்தர் ஐயரும் அந்தத் தலித் ஊழியரும் இந்தியாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். சுந்தர் அமெரிக்காவில் உள்ள சிசுகோ நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த பின்புதான் அதே நிறுவனத்தில் அந்தத் தலித் இளைஞரும் பணியில் இணைந்திருக்கிறார். அப்பொழுது சுந்தர் ஐயர் தன்னோடு பணியாற்றும் ஊழியர்களிடம் இவர் தன்னோடு படித்ததையும் இட ஒதுக்கீட்டின் வழியாக மேற்படிப்பு படித்ததையும் சொல்லி இருக்கிறார். இதன் வழியாக அந்த நிறுவனத்தில் உள்ள எல்லா பார்ப்பன இந்தியர்களும் இவர் ஒரு பட்டியல் சாதியைச் சார்ந்தவர் என்பதைப் புரிந்து கொண்டு அன்று முதல் இவரை ஒடுக்குமுறையில் தனிமைப்படுத்துகிறார்கள்.

தற்போது இவ்வழக்கில் அம்பேத்கர் பன்னாட்டு மையம் தன்னையும் இணைத்துக் கொண்டுள்ளது. இவ்வளவு நாட்களாக இந்த வழக்கு வலுவிழக்கக் காரணமாக இருந்தது, அமெரிக்க சட்டத்தில் சாதி பாகுபாட்டை ஒரு பாகுபாடாக வரையறுக்கவில்லை என்பதுதான். ஆனாலும் அமெரிக்காவில் உள்ள ஹார்வேர்ட் பல்கலைக்கழகம், பிரவுன் பல்கலைக்கழகம், கலிபோர்னியா மாநிலப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களில் சாதிய பாகுபாடு தடைச்செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் சியாட்டில் நகர சபையில் ஒடுக்கப்பட்ட சாதியினரைப் பாதுகாக்க அவசர சட்டத்துக்கான தீர்மானத்தைக் கடந்த காலங்களில் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த சியாட்டில் நகர சபை உறுப்பினர்களில் ஒருவரான சமா சாவந்த் அவர்களால் முன்வைக்கப்பட்டுத் தீர்மானம் வெற்றி பெற்றுள்ளது. சியாட்டில் நகரத்தில் இனி பட்டியலின, பிற்படுத்தப்பட்ட சமூக தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் நிலையில் சாதி, இனம், நிறம், பாலினம், மதம், மற்றும் தேசியம் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதை இந்தச் சட்டம் தடை செய்யும்.

இந்தியாவில் பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சாதிய படிநிலைகள் உலகமெங்கும் குறிப்பாக, மேற்கு நாடுகளுக்குக் கடத்தும் பார்ப்பனர்களின் இந்த மலிவான போக்கை இந்துக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் எல்லா மேல்நிலைகளையும் தன் அதிகாரத்தில் வைத்திருக்கும் இந்தப் பார்ப்பனர்கள், வளர்ந்த நாடுகளிலும் இந்த சனாதனத்தை எடுத்துச் சென்று அங்கேயும் உயர் பதவிகளைத் தன் வயப்படுத்திக் கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே மேற்கு நாடுகள் அனைத்திலும் இந்தச் சாதிய பாகுபாடு தடைச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

■ **அநிமண்**

---

# கடலூர் -சாத்தப்பாடி மக்கள்மீது தாக்குதல் - கண்டித்து த.ம.கூ. ஆர்ப்பாட்டம்

கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டம் சாத்தப்பாடி தெற்கு தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்கள் மாசிமகத் திருவிழா 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டாடக் கூடிய ஒரு நிகழ்வாக இருந்து வருகிறது. இத்தகைய நிலையில் இந்த ஆண்டு திங்கள் (06/0 3 /2023) அன்று சாலக்கரை மாரியம்மன்கோயில் கன்னிசாமிக்குக் காப்பு கட்டி விரதம் இருப்பார்கள். புவனகிரி வழியாகப் பரங்கிப்பேட்டை புதுக்குப்பம் கடற்கரைக்குப் பகல் 1 மணியளவில் கடற்கரைக்குச் சென்று படையல் இட்டுத் திரும்ப 3 மணி அளவில் புறப்பட்டனர். அப்போது டிராக்டரில் சாமி பாடல் போட்டபடி சாத்தப்பாடி கிராமத்தார் கிராம இளைஞர்கள் சாமியோடு வந்துள்ளனர்.

இது பிடிக்காத அந்தப் பகுதியில் வாழ்ந்த மேலமானகுடியைச் சேர்ந்த சாதி வெறியர்கள் சாத்தப்பாடி ஆதிதிராவிட இளைஞர்களைச் சரமாரியாக வழிமறித்து 20 பேர் இருசக்கர வண்டியில் வந்து தாக்கியுள்ளனர். சண்டை 6. 45 மணிக்கு நடந்துள்ளது. சாதி வெறியர்கள் கழி, கட்டை, கருங்கல்லால் 20க்கும் மேற்பட்ட நபர்கள் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகச் சாத்தப்பாடி ஆதிதிராவிட மக்களைச் சரமாரியாக தாக்கியுள்ளனர். பறப்பசங்களுக்கு சாமி ஊர்வலம் கேக்குதா, பற தேவிடியா பசங்கள என்றும் கெட்ட வார்த்தைகளால் திட்டி, கொன்னுப்போடுங்கடா என்றும் அடித்துள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான சாத்தப்பாடி கிராம மக்கள் திரிவூர்தியி(ஆம்புலன்சி)ல் மருத்துவமனைக்குப் போகும் போது மேலமானக்குடியைத் தாண்டி தெற்குத் திட்டையில் (ஆதிதிராவிடப் பெண் ஊராட்சி மன்ற தலைவரைத் தரையில் அமர்த்திய ஊர்) போய்க் கொண்டிருக்கும் போது மேலமானக்குடியை சேர்ந்த சாதி வெறியர்கள் இருசக்கர வண்டியில் திரிவூர்தியை(ஆம்புலன்ஸை) மறித்து 10 பேர் வண்டியைத் தட்டி மறித்து நிறுத்தி ஏற்கனவே தாக்குதலுக்கு உள்ளான சாத்தப்பாடி ஆதிதிராவிட இளைஞர்களையும் பெண்களையும் சாதி வெறியர்கள் மீண்டும் வண்டி உள்ளேயே தாக்கியும் கீழே இழுத்துப் போட்டுத் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

புவனகிரி காவல்துறை பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் இளைஞர்கள் ஐந்து பேரிடம் சிதம்பரம் RMMCH மருத்துவமனையில் வாக்குமூலம் வாங்கி கொண்டது. சிதம்பரத்தில் உள்ள அரசு மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் வாக்குமூலம் வாங்கியுள்ளனர். .கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சாத்தப்பாடி சிற்றூரில் சாதிய வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களை மக்கள் உரிமைக்கான கூட்டமைப்பு சார்பில் சந்தித்து, வன்கொடுமை குறித்துக் கேட்டறிந்தனர்.

காவல்துறையின் அச்சுறுத்தும் போக்கின் காரணமாக மக்கள் அச்சமடைந்துள்ளனர்; ஊர் வெறிச்சோடியுள்ளது .புவனகிரி வட்டம், சாத்தப்பாடு சிற்றூரில் பாதிக்கப்பட்ட, தாக்குதலுக்கு உள்ளான அப்பாவி இளைஞர்கள் மீது புவனகிரி காவல் நிலையத்தார் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்துள்ளனர். புவனகிரி காவல் நிலையத்தார் சாதி வெறியர்களுக்கு ஆதரவாக தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர். இந்த வழக்கை நேர்மையான விசாரணை நடத்திப் பாதிக்கப்பட்ட அப்பாவி இளைஞர்களை இவ்வழக்கில் இருந்து உடனடியாக விடுவிக்க வேண்டும்.

மக்கள் உரிமைக்கான கூட்டமைப்பின் சார்பில் 15.3.23 இன்று சிதம்பரம் காந்தி சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்து அமைப்புகளையும் சார்ந்த சேர்ந்த தோழர்கள் 100□க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

■ **தயாநிதி**